தையும், அவர் விரைவிலே முழு உடல் நலம் பெற்று, எப்போதும் போல அவருடைய பணியை ஆற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படத்தக்க அளவுக்கு அவர் முழு உடல் நலம் பெறவேண்டும் என்ற விருப்பத்தை, விழைவை, நல்ல எண்ணத்தை இந்த அவை தெரிவிக்கிறது என்ற தன்மையை, தங்கள் மூலமாக வாடிகன் சிட்டியினுடைய அந்த போப் ஆண்டவருடைய செயலாளருக்கு அனுப்பிவைப்பது முறையாக இருக்கும்.

இந்த அவையினுடைய அத்தனை பேர்களும் ஒரே மனதாக அந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்கள் என்ற முறையில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவர்களுடைய கருத்துக்களோடு என்னுடைய எண்ணங்களையும் நான் பகிர்ந்து கொள்கிறேன். போப் ஆண்டவர் அவர்கள் எதிர் பாராத வகையிலே சுடப்பட்டார் என்ற செய்தியையும், அதனாலே அவர் உடல் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார் என்பதையும் காலையிலே செய்தித்தாள் களிலே பார்த்து நானும் திடுக்கிட்டேன். போப் ஆண்டவர் அவர் களை நேரிலே சந்தித்து அளவளாகிற வாய்ப்பை நான் பெற்றிருக் கிறேன். அவர் பூரண குணம் அடைய வேண்டும் என்கிற இந்த அவையின் பெருவிருப்பத்தோடு என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்து அவர் பூரணமாகக் குணம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தை நானும் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

அ. குரோம்பேட்டை கலவரம்.

திரு. என் எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இரண்டு பிரச்னைகள் குறித்து ஒழுங்குப் பிரச்னை கிளப்புவதற்கு தங்களுடைய மேலான அனுமதியைக் கேட்டுக்கொள்கிறேன். ஒன்று இங்கே செவ்வாய்க் கிழமை மாலை சட்டமன்றம் நடந்துகொண்டு இருக்கின்ற போதே சென்னைக்கு அருகாமையில் உள்ள குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகே 10 சமூக விரோதிகள் ஒன்று சேர்ந்து கொண்டு அங்கேயிருக்கும் மார்க்கெட், சினிமாக் கொட்டகை ரயில் நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களையும், அந்த இடங்களில் உள்ள பொருள்களையும் பயங்கரமாகத் தாக்கியிருக் கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பிரச்னையை இப்போது எழுப்பக் கூடாது. இதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர விரும்பினால், கொண்டு வரலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலேயே இப்படிப்பட்ட பயங்கரமான சம்பவம் நடந்து இருப்பதால், மக்கள் மத்தியில் ஒரு பெரிய பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, அரசுத் தரப்பில் இது குறித்து ஏதாவது செய்தி சொல்ல முன்வருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஏற்கனவே இந்தப்

பொருள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவற்றிற்கான செய்திகளைச் சேகரித்துத் தர அவகாசம் இல்லை என்பதால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இருப்பினும், அரசுத் தரப்பில் ஏதேனும் கருத்து இருந்தால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதுபற்றிய முழு விவரங்கள் கிடைக்கவில்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்களுக்கு மதிப்பளித்து, அது பற்றிய விவரங்களைச் சேகரித்து, அவற்றைத் தவிர்க்க, தடுக்க என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அதை அரசு எடுக்கும். எதிர்காலத்தில் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் நிகழாமல் இருப்பதற்கும் காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும். அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதில் அரசு உறுதியாக இருக்கும் என்பதை மட்டும் இப்போது இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இரண்டு பிரச்னைகள் பற்றி கேட்க நான் அனுமதி கேட்டேன். ஒன்றுதான் கேட்டு இருக்கிறேன். ஆகவே, பாதி கிணறு தாண்டிய நிலையில் இருப்பதால், மற்றொன்றையும் கேட்க அனுமதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஒருவருக்கே திரும்பத்திரும்ப வாய்ப்பு அளிக்க முடியாது.

ஆ. கைதான தொழில் நுட்பத் தொழிலாளர்களை விடுதலை செய்தல்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு வேளாண்மைத் தொழில் நுட்பத்தொழிலாளர்கள் நடத்தி வந்த உண்ணாவிரதம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில், அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தினால் அவர்களை அழைத்துப் பேசுவோம் என்று சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி நடத்திய போராட்டத்தின் காரணமாக அவர்களில் கிட்டத்தட்ட 820 பேர் சிறையில் இருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் மாண்புமிகு முன்னவரின் உறுதிமொழியை அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, அவர்களுடைய உண்ணாவிரதத்தையும் நிறுத்தச்சொல்லி, அவர்களும் உண்ணாவிரதத்தை நிறுத்தி இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கிட்டத்தட்ட 4,000,5,000 ஆசிரியர்கள் சிறையில் இருக்கிறார்கள். நாளைக்கு அசெம்பிளி முடியப் போகிறது. ஆகவே, அவர்களை விடுதலை செய்கின்ற அறிவிப்பை இங்கே வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வர வேண்டும். உடனடியாக அவர்களை விடுதலை செய்யும் அறிவிப்பை வெளியிட வேண்டும் அதன்மூலம் பேச்சுவார்த்தை நடத்த ஒரு சுமுகமான சூழ்நிலையினை உருவாக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.